செ.வெ.எண்: 12 நாள்: 08.01.2017

# பத்திரிக்கை செய்தி

மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் வெளியிடப்பட்டுள்ள வரைபடங்களுடன் கூடிய வார்டு எல்லை மறுவரையறை வரைவு கருத்துருக்கள் மீது அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்கள் மற்றும் ஆட்சேபணைகளை எழுத்துப்பூர்வமாக சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் 05.01.2018 வரை தெரிவிக்கலாம் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது, தமிழ்நாடு மறுவரையறை ஆணையம் இதற்கான கால அவகாசத்தை நீட்டித்துள்ளது. இதன்படி, காஞ்சிபுரம் மாவட்ட இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள உள்ளாட்சி அமைப்புகளின் வார்டு எல்லை மறுவரையறை வரைவு கருத்துருக்களை kanchi.nic.in என்ற இணையதளத்தின் மூலம் பெற்று சரிபார்த்து, மேற்படி வரைவு கருத்துருக்களின் மீது கருத்துக்கள் மற்றும் ஆட்சேபணைகளை தெரிவிக்க விரும்பும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்கள் மற்றும் ஆட்சேபணைகளை எழுத்துப்பூர்வமாக சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), மாவட்ட ஊராட்சி செயலர், நகராட்சி ஆணையர், பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் நேரடியாகவோ அல்லது பதிவஞ்சல் மூலமாகவோ 12.01.2018 மாலை 5.45 மணிக்குள் தெரிவிக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சியருக்காக,
காஞ்சிபுரம்.

6.1.18